Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/57/2024

ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்
ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

நமது மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம் அக்டோபர் 7 முதல் 11 வரை நடந்ததை நீங்கள் அறிந்ததே. நானும் அருட்தந்தையர்களோடு இணைந்து இவ் தியானத்தில் பங்கேற்றேன். இறை ஈசோவோடு இணைந்து நெருக்கமாகப் பயணித்த அந்நாட்கள் ஆன்ம வலுவூட்டும் நல்ல நாட்களாக அமைந்தன. தியானம் வெற்றி அடைய வேண்டுதல் செய்த உங்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றியை தெரிவிக்கிறேன். அந்நாட்களில் சிறப்பான முறையில் உங்களுக்காக நாங்களும் வேண்டுதல் செய்தோம். மேலும் குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் என அனைவரும், வயநாடு மக்களின் மறுவாழ்விற்காக உளமார நன்கொடை அளித்தீர்கள். அப்பணத்தின் உதவியுடன் அப்பகுதி மக்களின் மறுவாழ்விற்காக நிறைமனதுடன் உதவ முடிந்ததற்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்.

நமது மறைமாவட்டம் இவ்வாண்டு செயல்படுத்தவிருக்கும் நான்கு முக்கிய நிகழ்வுகளைப் பற்றி இச்சுற்றுமடல் வாயிலாக உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்நிகழ்வுகளுக்கு சில நுணுக்கமான திட்டமிடலும் ஆன்ம தயாரிப்புகளும் தேவைப்படுகின்றன. அதற்கு இச்சுற்றுமடல் உதவும் என்று நான் நம்புகிறேன்.

1. மறைபரப்பு ஞாயிறு - அக்டோபர் 20, 2024

2024 ஆம் ஆண்டிற்கான மறைபரப்பு ஞாயிறுக்கான செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார். அதில், மறைபரப்பு 'உலகளாவியது' என்றும் அவசரமாக முன்னெடுக்க வேண்டியது என்றும் கூறுகிறார். மேலும் அவர், "நற்செய்தி அறிவிப்பதற்காகத்தான் திருச்சபை நிலைகொள்கிறது" என்றும் கூறுகிறார். அதுமட்டுமல்லாது, மறைபரப்புப்பணி திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரின் கடமை என்பதையும் வலியுறுத்துகிறார். "உலகின் கடையெல்லைவரை நீங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்னும் ஈசோவின் வார்த்தைகளை தமது மறைபரப்பு செய்தி மூலமாக நமக்கு நினைவூட்டுகிறார்.

சீரோ-மலபார் திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம், மறைபரப்பு ஆர்வத்தை நமது மரபுவழிப் பெற்றிருக்கிறோம். கி.பி. 52ஆம் ஆண்டு ஈசோவின் திருத்தூதர்களுள் ஒருவரான மார்தோமா கேரளாவின் கடலோரத்தில் நற்செய்தியை சுமந்து வந்தார். இத்தகைய மரபைப்பெற்ற நாம், இந்தியாவிலும் உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கும் அழைத்தலைப் பெற்றிருக்கிறோம்.

திருத்தூதர் தோமாவின் பாதச்சுவடுகளைப் பின்செல்லும் நமது மறைமாவட்டமானது 2017-ஆம் ஆண்டு தொடங்கி மறைபரப்புப் பணியில் புதிய பரிணாமத்தைத் எட்டி இருக்கிறது. அர்ப்பணமிக்க நமது மறைபரப்புப் பணியாளர்கள், திருநெல்வேலி, கயத்தார் (தூத்துக்குடி), தென்காசி, விருதுநகர், இராமேஸ்வரம், மதுரை, கம்பம், தேனி போன்ற இடங்களில் வாடகை வீடுகளில் தங்கி நற்செய்தி அறிவிக்கத் துணிந்திருக்கிறார்கள். துணிச்சல் மிக்க நமது அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும், ஏழைகள் மற்றும் பிறமதத்தினர் நடுவில் பலவித சாவால்களை எதிர்கொண்டு மறைபரப்புப் பணியை மேற்கொள்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும், அன்பும் அவர்களை முன்னோக்கிப் பயணிக்க வைக்கிறது.

மறைமாவட்ட மக்களிடையே, மறைபரப்புப்பணிகளைப் பற்றிய விழிப்பை ஏற்படுத்தும் நோக்குடன் 6 உறுப்பினர்கள் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு, நமது பங்குகளை சந்தித்து மறைத்தொண்டில் ஆர்வமுடையவர்களை ஒருங்கிணைத்து, திருத்தொண்டு ஆர்வத்தையும் செப உணர்வையும் ஏற்படுத்தி மறைத்தளங்களுக்காக செபிக்கவும் வைக்கிறார்கள்.

2024 அக்டோபர் 20 அன்று மறைபரப்பு ஞாயிறை நாம் அனுசரிக்கிறோம். உலகெங்கும் உள்ள மறைபரப்பு பணிகளுக்காக செபிக்கவும், பொருளுதவி செய்யவும் இந்நாள் நமக்கு உதவுகிறது. மறைபரப்பு கவர் வழியாக பணம் கொடுப்பதோடு உணவுவிழா, பயன்படா பொருட்களை விற்று பணமாக்குதல், சிறப்பு காணிக்கைப் பவனி போன்ற முன்னெடுப்புகள் வழியாகவும் மறைபரப்புப் பணிக்காக நீங்கள் பணம் சேகரிக்கலாம். அப்பணம் மறைமாவட்டம் வழியாக உலகளாவிய சபையின் மறைபரப்புப் பணிகளுக்காக உரோமைக்கு அனுப்பப்படும்.

2. மறைமாவட்ட ஜெபமாலைப் பவனி

அக்டோபர் மாதம் ஜெபமாலை அன்னைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். இம்மாதத்தில் மரியாயின் சேனை தலைமையில் மறைமாவட்ட மக்கள் இணைந்து ஜெபமாலை பவனி நடத்துவது வழக்கம். இவ்வாண்டைய பவனி, அக்டோபர் 27-ஆம் தேதி சேனங்கோடு லொறேட்டோ மாதா ஆலயத்தில் தொடங்கி குலசேகரம் புனித ஜாண் பால் ஆலயத்தில் வந்தடையும்.

இவ்வாலயங்கள் திருத்தொண்டு தளங்களாக இருப்பதால், இவ்வாண்டையப் பவனி முக்கியத்துவம் பெறுகிறது. அன்னை மரியா பக்தியை திருத்தொண்டுப் பணியோடு ஒருங்கிணைக்கும் நல்நிகழ்வாக இது அமையும். பங்குகளிலிருந்து, திரளான இறைமக்கள் பங்கேற்று அன்னையின் பரிந்துரையை புகழ்பாடி இறையருள் வேண்ட கேட்டுக் கொள்கிறேன். மறைமாவட்டம், மறைத்தொண்டு தளங்கள் மற்றும் உலகளாவிய திருச்சபைக்காக அன்னையின் பரிந்துரை நாடும் சிறப்பான நாளாக

இதை மாற்றுவோம். இந்நிகழ்வு நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு, பொது மக்கள் நடுவில் நாம் வெளிப்படுத்தும் கத்தோலிக்க நம்பிக்கையின் சாட்சியமாகவும் இது அமையும்.

3. சிறுமலர் மிஷன்லீக் (CML) றாலி

இவ்வாண்டு, சிறுமலர் மிஷன்லீக் றாலி, நவம்பர் 17ஆம் தேதி நடத்தப்படுகிறது. இப்பயணம் பிற்பகல் 2 மணிக்கு திரித்துவபுரம் மூவோர் இறைவனின் ஆலயத்தில் தொடங்கி, படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் நிறைவடையும். நம்முடைய முன்னாள் ஆயரும், முன்னாள் உயர் பேராயருமான கார்டினல் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களும் இப்பயணத்தில் பங்கேற்பதால் இவ்வாண்டயை நிகழ்வு முக்கியத்துவம் பெறுகிறது. எனவே பங்குத் தந்தையர்கள் மிஷன் லீக் உறுப்பினர்கள் அனைவரையும் றாலி-இல் பங்கேற்க வைக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன். றாலிக்குப் பின்னர் நடைபெறும் கூட்டத்திற்கு கார்டினல் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் தலைமை தாங்குவார்கள். இதில் மிஷன் லீக் உறுப்பினர்கள் மட்டுமல்லாது மறைமாவட்ட மக்கள் அனைவரும் பங்கேற்க நான் அன்புடன் அழைக்கிறேன்.

4. 27-ஆவது மறைமாவட்ட நற்செய்திக் கொண்டாட்டம்

மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா, வழக்கமாக கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடத்தப்பட்டு வருவதை அறிவீர்கள். இது, மூன்று நாள்கள் காலை முதல் மாலை வரை நடத்தப்பட்டுவருகிறது. இது சிறப்பாக நடக்கிறது என்பது உண்மையே. ஆனால், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகள், வேலைநாட்களாக இருப்பதால் அந்நாட்களில் பங்கேற்பு குறைவாக இருக்கிறது. மேலும் நற்செய்திக் கூட்டத்தில் பங்கேற்போரின் எண்ணிக்கை, பொதுவாகக் குறைந்து வருகிறது எனலாம். இக்குறைகளைப் போக்கி பங்கேற்போரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட நேரம்: 27-ஆவது மறைமாவட்ட நற்செய்திக் கொண்டாட்டம் 2024 நவம்பர் 29, 30 மற்றும் டிசம்பர் 1 ஆம் தேதிகளில் நடைபெறும். வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 5.00 மணிக்குத் தொடங்கி இரவு 9.30 க்கு நிறைவடையும். ஞாயிறு அன்று பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கி இரவு 9.30 மணிக்கு முடிவடையும்.

இடம்: இவ்வாண்டு, அனைவரும் வந்து செல்வதற்கு வசதியாக படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நடத்தப்படுகிறது.

குழந்தைகளுக்கான தியானம்: சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் மிஷன் லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கப் பிள்ளைகளுக்கான தியானம், நற்செய்திப் பெருவிழா நடக்கும் அதே நேரத்தில் அதே வளாகத்தில் வேறு இடத்தில் வைத்து நடைபெறும்.

இதற்கான தயாரிப்பின் பகுதியாக, அருட்தந்தையர் மற்றும் பொதுநிலையினர் அடங்கிய சிறப்புக் குழு புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் உங்கள் பங்குகளைச் சந்தித்து இறைவார்த்தைப் பகிர்ந்து நற்செய்தி பெருவிழாவிற்கான தயாரிப்பில் ஈடுபடுவார்கள். பங்களவிலான தயாரிப்புகளில் நீங்கள் பங்கேற்கக் கேட்டுக் கொள்கிறேன். இது நம்மை மனதளவில் தயாரிக்க உதவும். மேலும் உங்கள்

பங்குகளில் நடைபெறும் ஆராதனை மற்றும் தியான உரைகள் நற்செய்திக் கொண்டாட்டத்திற்கான ஆன்ம தயாரிப்புகளாக அமையும்.

இத்தயாரிப்புகள் நற்செய்தி பெருவிழா நாட்களில் ஆண்டவர் பொழிய இருக்கும் அளப்பரிய அருளின் முன்சுவைகள் மட்டுமே என்பதை நினைவில் கொள்வோம். புனித பவுலின் அறிவுரையை ஏற்போம். "தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை; செவிக்கு எட்டவில்லை; மனித உள்ளமும் அதை அறியவில்லை." (1கொரி 2,9) மேற் கூறியவற்றை கவனமுடன் கருத்தில் கொண்டு மறைமாவட்டம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் கரம் கோர்த்துப் பயணிப்போம்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
08.10.2024

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலை 13.10.2024, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.